JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**A1 absent. Petition filed and allowed. A2 present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of **11.03.2026.**

**C.C. 81/2016** **Name**: கோபால் **S/o**. பழனிச்சாமி **P.W**. 3

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 3 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய வீடு காடப்பாளையம் பேருந்து நிறுத்தத்திலிருந்து சற்று உள்ளே உள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் இருந்து என்னுடைய வீடு சுமார் 300 மீட்டர் தூரம் ஆகும். சம்பவம் நடந்த நேரம் இரவு சுமார் 9.30 மணி இருக்கும். நான் எதற்காக சம்பவ இடத்துக்கு சென்றேன் என்றால் அங்கு ஒரு வீடு கிரகப்பிரவேசம் என்பதால் சென்று இருந்தேன். நான் பஸ் ஸ்டாப்பில் இருந்து 20 அடி தள்ளி நின்று கொண்டு இருந்தேன். அதன் பிறகு நான் சத்தம் கேட்டு தான் என்ன நடந்தது என்று பார்த்தேன் என்றால் சரிதான். நான் பஸ் ஸ்டாப்பில் சென்று கேட்டுவிட்டு தான் பின்னிட்டு சென்றேன் என்றால் சரியல்ல நான் சத்தம் கேட்டவுடன் அண்ணா சிலை வரை துரத்தி சென்றேன் பின்னிட்டு அவர்கள் எங்கு சென்றார்கள் என்று தெரியவில்லை.

2. நான் துரத்தி சென்ற நபர்கள் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் துரத்தி சென்ற நபர்களை பிடிக்க முடியவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை அன்றைய தினம் விசாரித்ததற்கு பிறகு மீண்டும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு 1 ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை